# இராமகிருஷ்ண பரமஹம்சரின் சிந்தனை – ஒரு நோக்கு

திருமதி. நா.செல்வநாயகம்

**ஆய்வுச்சுருக்கம்**

*இராமகிருஷ்ண பரமஹம்சர் முறையான கல்வி எதனையும் பெற்றிராதவர். அவர் வாய் மொழி வடிவத்தில் உருவகக் கதைகளாக அமைந்த படிமங்களாகத் தனது மெய்யியற் சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளார். இம்மெய்யியற் சிந்தனைகள் மனித குலத்திற்கு புதிய தொரு வாழ்வுக் கலாசாரத்தினைப் போதித்தன. அத்தகைய சிந்தனைகள் பற்றிய ஆய்வுத் தொகுப்பாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.*

நவீனகால இந்திய மெய்யியற் சிந்தனையில் குறிப்பாக இந்திய சீர்திருத்த இயக்கத்தின் முன்னோடிச் சிந்தனையாளராய் இராமகிருஷ்ணர் (1834–1886) விளங்குகிறார். இவரது இயற்பெயர் கதாதர் சட்டர்ஜி. ஏழ்மையான பிராமணக் குடும்பத்தில் பிறந்த இவர் முறையான கல்வி எதனையும் பெற்றவரில்லை. இந்து, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமய சித்தாந்தங்களையும், கிரியைகளையும் அறிந் திருந்திருந்தார். தத்துவ நூல்கள் எதனையும் இவர் எழுதியவரல்ல. வாய்மொழி வடிவத்தில் உருவகக் கதைகளாயமைந்த படிமங்களாக இவர் தனது கருத்துக்களை வெளிப்படுத்தினார். இராமகிருஷ்ணரின் சமகாலத்தவர்களின் அபிப்பிராயப்படி அவர் உலகின் இயற்கை இயல்பு பற்றியும், தோற்றப்பாடுகள் பற்றியும் கூர்ந்தமதியும், செறிவான உள்ளுணர்வும் கொண்டிருந்தார். நாளாந்த வாழ்க்கையில் நிகழுகிற சாதாரண சம்பவங்களினடியாக அவரால் மேற்கொள்ளப் பட்ட போதனைகள் கேட்பவரிடத்து ஆன்மீக உணர்ச்சியைத் தூண்டிவிடும் ஆற்றலுள்ளவையாகக் காணப் பட்டன. தனது போதனைகள் மூலமாக மனிதனுக்குப் புதியதொரு வாழ்க்கைக் கலாசாரத்தை போதித்தார். இது அவரைப் பின்பற்றியவர்களின் ஆன்மாவை உலுப்பியது.

எல்லா மதங்களின் போதனைகளும் சாராம்சத்தில் ஒன்றேயென்றும், பலசமயங் களும் கூறும் கடவுளர்களும் அடிப்படையில் ஒருவரேயென்றும் பரமஹம்சர் நம்பினார். சிலர் அல்லா என்றும், வேறு சிலர் பிரமம் என்றும், இன்னும் சிலர் காளி என்றும், ஹரி என்றும், புத்தரெனவும் ஒரே கடவுளை வெவ்வேறு பெயரிட்டு அழைக்கின்றனர். நீரை எவ்வாறு பல்வேறு மொழிகளிலும் பல்வேறு பெயரிட்டு அழைக்கின்றனரோ அது போலவே உள்பொருள் ஒன்றேயாயினும் அல்லா என்றோ, பிரமம், என்றோ வெவ்வேறு பெயர்களால் அழைக்கின்றனர். 'எனது சமயமே மெய்ச்சமயம் ஏனையவை பொய்' என்பன போன்ற சாற்றுரைகள் அனைத்துமே இராம கிருஷ்ணரின் கருத்துப்படி உண்மையல்ல, அவையனைத்தும் ஒரே இலக்கைச் சென்றடையும் வெவ்வேறு பாதைகளே என்கிறார். குருடர்கள் யானையைப் பார்த்த கதை, மூலம் இது அவரால் விளக்கப்படுகிறது.[1]

சமயங்களிற்கிடையிலே வேறுபாட்டைக் கற்பிப்பது அர்த்தமற்றதும், தீங்கு பயப்பதுமாகு மெனக் கருதும் இராமகிருஷ்ணர், இறைவன் முடிவிலாப் பண்புகளைக் கொண்டவனாகவும், உருவமுடையவனாகவும் உருவமற்றவனாகவும் இருப்பதால் அவன் பல்லுருவப் பண்பைக் கொண்டவனாக எடுத்துக்காட்டுகிறார்[2]. அவருடைய வடிவத்தை எவரும் அறிந்ததில்லை. கிருஷ்ணராகவோ கிறிஸ்துவாகவோ அல்லது வேறு அவதாரங் களையோ பெற்றிருப்பினும், அவர் உருவமற்ற வராகவும், பிரிப்பற்றவராகவும், ஆனந்தமய மானவராயும் உள்ளவர்.

இராமகிருஷ்ணர் வேதாந்த மெய்யியலைப் பின்பற்றியவராக இருப்பினும், அவரது வேதாந்த மானது சங்கரராலும் இராமானுஜராலும் போதிக்கப்பட்ட வேதாந்த தரிசனத்திலிருந்தும் குறிப்பிடத்தக்க வகையில் வேறுபட்டிருக்கிறது. இராமகிருஷ்ணரின் கருத்துப்படி சங்கர வேதாந்தம் மிகவும் அரூபமானது. புலன் உலகும் ஆன்மாக்களும் வெறும் தோற்றமே என்ற சங்கர வேதாந்த நிலைப்பாடு அவருக்கு உடன்பாடான தல்ல, இராமானுஜரின் விஷிட்டாத்வைதமும் இராமகிருஷ்ணருக்கு உடன்பாடானதல்ல. இரா மானுஜர் உலகு தோற்றப்பாடான இயல்புடைய தல்ல எனக் கூறினும் பிரமத்திலிருந்து உருவானதே என்பதை ஏற்றுக் கொள்கிறார்.

இராமகிருஷ்ணரின் வேதாந்தமானது தற்சார்பற்ற இலட்சியவாதமாகும். அது சமூக வாழ்க்கை வரை தன் உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கிறது. அவர் பிரமத்திற்கும் உலகாகிய தோற்றப்பாட்டிற்கும் இடையிலான தொடர்பை பின்வருமாறு விளக்குகிறார். விளாம்பழத்தில் விதைகள், தசை, ஓடு என்பன உண்டு. விதைகளையும் ஓட்டையும் நீக்கியே தசையை நாம் எடுக்கிறோம். ஆனால் விளாம்பழத்தின் நிறையைப் பற்றிப் பேசும் பொழுதோ தசையை மட்டுமல்ல, விதைகளும் ஓடும் சேர்ந்ததே அதன் நிறையாகும். இதுபோலவேதான் பிரமம் அனைத்துத் தோற்றப்பாடுகளையும் உள்ளடக்கியிருக்கிறது[3].

ஒருமை வாதமான அத்வைத வேதாந்தத் தைப் பின்பற்றுபவர்களின்படி இவ்வுலகு மெய்யானதல்ல. அது துயில் நிலைக்குச் சமனானது. இவர்களின் போதனைப்படி நனவுநிலை, கனவுநிலை, ஆழ்துயில்நிலை என்ற மூவகை நிலைக்கும் பரமாத்மன் சாட்சியாக உளது. இவையெல்லாம் கருத் துக்களே. இராமகிருஷ்ணரது அபிப்பிராயப்படி துயில் நிலையைப்போலவே விழிப்புநிலையும் மெய்யானது. இதனை இராமகிருஷ்ணர் பின்வரும் உதாரணத்தின் மூலம் விளக்குகி றார்.

'ஒரு கிராமத்தில் அத்வைத வேதாந்தி யான ஒரு விவசாயி இருந்தான். அவனுக்கு ஒரேயொரு மகன் இருந்தான். ஒருநாள் வயலில் வேலைசெய்து கொண்டிருக்கையில் அவன் மகன் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருப்பதாக கேள்விப்பட்டு உடனடியாக வீட்டிற்குச் சென்று சிறந்த வைத்தியர்களை அழைத்து வைத்தியம் செய்தும் அவன் இறந்து போனான். வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் மிகுந்த துன்பமுடையோராய் புலம்பியபடியே இருந்தனர். ஆனால் விவசாயியோ எதுவும் நடக்காதது போன்ற மனநிலையில் இருந்தான். அடுத்தநாள் வழமைபோல வயலுக்குச் சென்று வேலை செய்தான். அவன் வீட்டிற்கு வந்தபொழுது அவன் மனைவி அவனிடம் மகனிறந்த துயரமேயில்லாது இரக்கமற்ற மனிதர் நடப்பது

போல அவனும் நடப்பதாக முறையிட்டாள். அதற்கு விவசாயியான கணவன் நான் கவலைப்படாததற்கு காரணமுண்டு 'நேற்று நித்திரையில் நான் ஒரு அற்புதமான கனவு கண்டேன். அக்கனவில் நான் ஒரு அரசனா கவும் பராக்கிரமசாலிகளான எட்டு ஆண் மக்களுக்கு தந்தையாகவும், சகல வசதிகளு டனும் மிகவும் மகிழ்சியுடன் நானிருக்கையில் திடீரென விழித்துக் கொண்டேன். இப்பொழுது நான் இழந்துபோன எட்டு ஆண் மக்களுக் காகக் கவலைப்படுவதா அல்லது இறந்துபோன இவ்வொரு மகனுக்காகக் கவலைப்படுவதா என குழம்பிய நிலையில் நானிருக்கிறேன் எனப் பதிலிறுத்தான்.

இவ்வுதாரணத்தில் வரும் விவசாயி ஒரு அத்வைதி அவனுக்கு துயில் நிலையைப் போலவே விழிப்பு நிலையும் மெய்யானதல்ல. ஆத்மனே நிரந்தர மெய்மை. இந்நிலைகள் எல்லாம் மெய்யானது எனக் குறிப்பிடும் இராமகிருஷ் ணர், விழிப்புநிலை, கனவுநிலை, ஆழ்துயில் நிலை என்பனவற்றுடன் சமாதி நிலையை ஒன்றிருப்பதாகவும், அது நான் காவது நிலையாகுமெனவும் எடுத்துக் காட்டுகி றார். பிரமம், மாயை, ஆன்மா மற்றும் உலகு என்ற நான்கும் உண்மையானதென நான் ஏற்றுக் கொள்கிறேன் என்கிறார்.[4]

இராமகிருஷ்ணரின் அபிப்பிராயப் படி பேரண்டம், நுண் அண்டம் என்பனவற்றை உள்ளடக்கியதே இயற்கைத் தோற்றப்பாடு இது காண்டா மணியோசை போல முழுமையின் அகல் விரிவாக்கமேயாகும். பிரபஞ்சத் தோற்றப்பாடான பேரண்டம், நுண்அண்டம், எவ்வாறு முழுமையிலிருந்து உண்டாகி, மீண்டும் அதில் சென்றடைகிறதோ அதுபோலவே பிரக்ஞையின் விழிப்புநிலை முதலான நால்வகை நிலையும் சமுத்திரத்தில் தோன்றிய அலைகள் மீண்டும் சமுத்திரத்திலேயே கரைவது போல, அதே முழுமையிலிருந்து தோன்றி, மீண்டும் அதனிடமே சென்றடைகிறது. காண்டா மணியோசை போல எல்லாத் தோற்றப் பாடுகளும் பிரமத்தில் தோன்றி பிரமத்தில் ஒடுங்கும். அனுபவத்தில் இதனை நான் உணர்ந்திருக்கிறேன் என இராமகிருஷ்ணர் குறிப்பிடுகிறார்.[5]

சடப்பொருள் உலகை மெய்யானதென இராமகிருஷ்ணர் ஏற்றுக்கொண்டாலும், அது பிரமத்திலிருந்து உருவானதே என்பதையும் அவர் ஏற்றுக் கொள்கிறார். இவ்வுலகத்தது எதுவும் பிரமத்தைப் பாதிப்பதில்லை என்ற நிலைப்பாடுடையவராகக் காணப்படுகிறார். நன்மை, தீமை, அறம் போன்ற இவ்வுலகத்து நடப்புகளால் பிரமம் பாதிப்புறுவதில்லை. இவற்றிற்கு ஜீவனுடன் மட்டுமே தொடர்புண்டு. பிரமத்தை விளக்கின் ஒளிக்கு ஒப்பிடலாம். விளக்கொளியின் துணைக் கொண்டு ஒருவன் புனித நூல்களை வாசிக்கலாம். அதே ஒளியில் பிறிதொருவன் திருட்டு வேலைகளைச் செய்யலாம். இவையெல்லாம் விளக்கொளியை பாதிப்பதில்லை அதுபோலவே உலகின் நன்மை தீமைகளினால் பிரமம் பாதிப்புறுவதில்லை. நல்லவருக்கும். தீயவருக்கும் பாகுபாடில்லாது சூரியன் ஒளியை வழங்குவது போல, பிரமமும் பாதிப்பு அடையாதிருக்கிறது.[6]

ஜீவனுக்கும், பிரமத்திற்குமிடையிலான தொடர்பு பற்றி பின்வரும் உருவகத்தின் மூலம் இராமகிருஷ்ணர் விளக்குகிறார். நீரோட்டத்தின் குறுக்கே தடியொன்றை வைப்போமாயின், தடியினால் நீர் பிரிந்து செல்வது போலத்

தோன்றுமாயினும் மெய்யாகவே அது பிரிந்திருப்பதில்லை. நீரினுள் தடியை வைத்திருப்பதாலேயே நீர் பிரிந்திருப்பதுபோலத் தோன்றுகிறது. அதனை அகற்றிவிட்டால் பிரிந்திருப்பது போன்ற தோற்றம் அகன்றுவிடும். அதுபோலவே மனித உடலாலும், ஆன்மாவினாலும் மனித ஆளுமை உருப்பெற்றிருக்கிறது. மனித உடலிலிருந்து ஆன்மாவை அகற்றிவிட்டால் ஆளுமையும் அற்றுப்போய் விடும். நீரின் அடியிலுள்ள காந்தக்கல் தன்னைக் கடந்து செல்லும் கப்பல்களின் இரும்பாணிகளைக் கவருவது போல உலகியல் நாட்டங்களால் கவரப்பெறும் ஆன்மா தனது ஆளுமையை நொடிப்பொழுதில் இழந்துவிடுகிறது.

இராமகிருஷ்ணரின் கருத்துப்படி தோற்றப்பாடான உலகிற்கும் பிரமத்திற்குமிடையிலான எதிர்நிலையானது இருவகை அறிவின் படிவங்களால் தொடர்புபடுத்தப்படுகிறது. அவை முறையே அவித்யாவும், வித்தியாவுமாகும். இயற்கையின் தோற்றப்பாடும், அதிற் காணப்படுவதையும் பற்றிய அறிவு அவித்யாவாகும். உளத்திற்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்டதும், விபரிக்கவோ அன்றி விளக்கவோ முடியாததுமான பிரமம் பற்றிய அறிவு வித்யாவாகும். உலகின் பன்மைத் தன்மை பற்றிய அறிவு அறியாமையிலிருந்தே தொடர்கிறது. இறைவன் எங்கும் உள்ளான் என்ற அறிவு எதனால் எமக்கேற்படுகிறதோ அதுவே உண்மையான அறிவாகுமென்பது அவரது அபிப்பிராயமாகும்.[7]

இராமகிருஷ்ணர் ஒரு யோகி என்றவகையில் சமாதி நிலையிலேயே பிரமம் அறியப்படலாமென்பது அவரது நிலைப்பாடாகும். சமாதி நிலையில் சிந்தனையோட்டம் தடைப்பட்டு, ஆன்மாவில் பூரண அமைதி நிலவுகிறது. பிரமத்தை உணர்ந்தவன் அமைதி உடையவனாவான் என இராமகிருஷ்ணர் கூறுகிறார்.

நெய்யைச் சட்டியிலிட்டு அடுப்பில் உருக்கும் பொழுது அதில் நீர் இருக்கும்வரை ஓசை கேட்கும். நீர் ஆவியானதும் ஓசை நின்றுவிடும். அதில் பலகாரத்தைப் போட்டால் அது நன்றாகப் பொரியும் வரை ஓசை கேட்கும். பிரமத்தைத் தேடுபவனும் அவ்வாறே உருக்காத நெய்யை ஒத்தவன். நீராகிய தன்முனைப்பும் உலகியல் நாட்டமும் அதிற் கலந்திருக்கும். தத்துவவிசாரத்தில் ஈடுபட்டுள்ள அவனது செயற்பாடு ஓசையை எழுப்பினும், அறிவாகிய நெருப்பினால் தூய்மைப்படுத்தப்படும் பொழுது அது அற்றுப்போய்விடுகிறது. நீராகிய தன்முனைப்பும், உலகியல் நாட்டமும் ஆவியாகிப் போக, ஆன்மா தூய்மையுற்று, சமாதிநிலையில் முழுமையான அமைதியைப் பெறுகிறது.[8]

அதேவேளை பிரமத்தின் சாராம்சத்தை அறிதல் தொடர்பான வினாக்களைப் பொறுத்தவரை இராமகிருஷ்ணர் அறியொணா வாத நிலைப்பாடு உடையவராய்க் காணப்படுகிறார். பிரமம் எதுவென எவராலும் கூறமுடியாது. அதேவேளை பிரமத்தை அறிந்தவர்களாலும் அதுபற்றி எதுவித தகவல்களையும் தரமுடியாதென அவர் குறிப்பிடுகிறார்.

நான்கு புறத்திலும் உயரிய சுவர்களினால் சூழப்பட்ட இடமொன்றை நான்கு பிரயாணிகள் கண்டனர். அதற்குள் இருப்பதனை அறிதற்கு மிகவும் ஆர்வம் கொண்டனர். அவர்களிலொருவன் சுவரின் உச்சிக்கு ஏறிப் பார்த்த பொழுது மகிழ்ச்சி மேலீட்டால் அவனால் எதுவும் பேசமுடியவில்லை. தனது சகபாடிகளிற்கு எதுவித தகவல்களையும் தராது அவன்

அதனுள் குதித்து விட்டான் ஏனைய மூன்று பிரயாணிகளும் அவ்வாறே செய்தனர். எவரொருவர் பிரமம் பற்றிய மேலான அறிவைப் பெறுகின்றாரோ அவர் மீண்டும் உலகியல் நிலைக்குத் திரும்புவதில்லை. அவர் தமது அகத்தை இழந்துவிடுவதுடன், அவரது உளம் செயலற்றுப் போகிறது. அனைத்து பிரக்ஞை உணர்வும் அற்றுப் போய்விடுகிறது.[8]

ஒருவன் பிரமத்தை அறிந்து அதில் உப்பு நீரில் கரைந்துபோவது போல கலப்புறும்பொழுது மனிதன் என்ற உலகியல் நிலை அவனுக்கு அற்றுப்போய்விடுகிறது.

உப்பினால் செய்யப்பட்ட பொம்மை யொன்று ஒருமுறை கடல் எவ்வளவு ஆழமான தென மற்றவர்களிற்கு அறிவிக்கவெண்ணி கடலினுள் சென்றது. ஆனால் அதன் விருப்பம் ஒருபொழுதும் நிறைவேறவில்லை. கடலிற் சென்ற அக்கணமே அதனுடன் இரண்டறக் கலந்து விட்டது. கடலின் ஆழத்தைப் பற்றிய செய்தியை யார் தருவார்? பிரமம் என்ற முடிவிலாக் கடலை அடைந்த ஜீவனின் நிலையும் இது போன்றதே.[9]

பூமியில் மனித வாழ்க்கையின் அர்த்தம் பற்றிய பிரச்சினை இராமகிருஷ்ணரின் போதனைகளில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. மாயை என்றவலையினுள் ஆன்மா அகப்பட் டுள்ளது. மனித வாழ்க்கையின் அர்த்தம் இந்த வலையிலிருந்து விடுபடுவது அல்லது சுயா தீனமடைவதாகும். ஆனால் சுயாதீனமடை வதோ அவ்வளவு இலகுவானதல்ல. இதற்கென நீண்ட போராட்டம் நடத்தப்படல் வேண்டும். எல்லா ஆன்மாக்களும் ஒரேவிதமாக நடப்ப தில்லையென்பதால் இது மேலும் சிக்கலான தாயுள்ளது. இராமக்கிருஷ்ணரின் அபிப்பிராயப் படி ஆன்மாக்களை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். பின்வரும் உருவகம் மூலம் இராமகிருஷ்ணர் இதனை விளக்குகிறார்.

மீனவன் வலையை வீசும் பொழுது சில மீன்கள் அதிலிருந்து தப்பிவிட முயற்சிக்கின் றன. அதாவது அவை சுயாதீனமடைய விரும்புகின்றன. இவை இரண்டாம் வகையான ஆன்மாக் களை ஒத்தன. முமுட்சுக்கள் சுதந்திரத்தில் ஆவலுள்ளவை. வலையிலிருந்து விடுபட விரும்பினாலும் அவற்றிற் சிலவே விடுபடுகின்றன. அதுபோலவே கட்டுக்களி லிருந்து விடுபட்ட ஆன்மாக்கள் மூன்றாவது வகையான முத்தர்கள் எனப்படுவர். சில மீன்கள் இயற்கையாகவே எச்சரிக்கையுடையனவா தலால் அவை ஒருபொழுதும் வலையில் அகப்படுவதில்லை. இத்தகைய ஆன்மாக்கள் முதலாம் வகையான நித்திய முக்தர்கள் எனப்படுவர். இவை உலக பந்தங்களினால் ஒருபொழுதும் பீடிக்கப்படுவ தில்லை. எக்காலமும் சுயாதீனமுடையன.

வலையில் அகப்பட்ட பெரும்பாலான மீன்கள் தமக்கு என்ன நடந்தது என்ற நினைவில்லாமல் பிடிபடும்பொழுது அங்குமிங் கும் ஓடி, இயலாது போக, சேற்றுக்குள் புதையுறுகின்றன. இவ்வுலக பந்தங்களினால் கட்டுப்பட்டு, வெளியேறமுடியாத ஆன்மாக்கள் இந்த வகையை ஒத்தன. மீண்டும் மீண்டும் உலக பந்தங்களில் கட்டுப்பட்டு அமிழ்ந்து போகின்றன. உலக பந்தங்களாகிய வலையில் அகப்பட்டு உழலும் இவர்களை எவராலும் விழிப்புணர் வடையச் செய்யவியலாது. இவை விபரிக்க வொண்ணா துன்பத்தில் ஆழ்ந்து கிடக்கின்றன. புதர்களை விரும்பி உண்ணும்

ஒட்டகம் அதிலுள்ள முட்களால் வாயில் இரத்தம் ஒழுகுவதையும் பொருட்படுத்தாது உண்ணுவது போல இத்தகைய ஆன்மாக்கள் துன்பம் விழைந்தபொழுதும் அதனைப் பற்றிய உணர்வில்லாது இருக்கின்றன."

உலக பந்தங்களினால் ஆன்மா பீடிக்கப் பட்டு உழலுவதற்குக் காரணம் என்ன வென்பதற்கு 'நான்' என்ற அகங்காரமே அதற்குக் காரணமென இராமகிருஷ்ணர் விடைதருகிறார். நான் என்ற அகங்காரம் அற்றுப்போயின் ஆன்மாக்களின் எல்லாத் துன்பங்களும் அற்றுப்போய்விடும். நான் என்பது கருமுகிலை ஒத்தது. கரியமுகில் சூரியனின் பிரகாசத்தை மறைப்பது போல, நித்திய சூரியனான பிரமத்தை 'நான்' மறைக்கிறது.. என்னைக் கவனி! இத்துண்டினால் எனது முகத்தை நான் இப்பொழுது மறைக்கிறேன். உன்னால் எனது முகத்தை அவதானிக்க முடிகிறதா? இல்லையல்லவா? ஆன்மா தன்னியல்பில் ஞானமும், ஆனந்தமயமானதுவு மாகும். மாயையினாலோ, அகங்காரத்தினா லேயோ அது தன்னியல்பை மறந்து, உடல் உளக் கட்டுப்பாடுகளால் பெரும் துன்பத்தை அனுபவிக் கிறது.

'உலகியலான பற்றுக்கள் ஆன்மாவின் இயல்பையே மாற்றியமைக்கும் வல்லமை படைத்தன. கவர்ச்சிகரமான உடையணிந்தவன் இயல்பிலேயே காதற் பாட்டுக்களைப் பாடியும், கடதாசி விளையாடியும், கைத்தடியை விசுக்கியும் நடப்பது தனக்குப் பெருமை தருவதென நினைத்துச் செயற்படுவான். கையில் பென்சில் இருந்தால் அது எவ்வாறோ அதனை வைத்திருப்பவனை எழுதச் செய்யும், பென்சிலிற்கு அத்தகைய இயல்புண்டு. பணம் இதனைவிட ஆற்றலுளது. ஒருவன் பணக்காரனானால் அவனது இயல்பு முற்றிலும் மாறிவிடுகிறது. அவன் முற்றிலும் வேறுபட்ட மனிதனாய் விடுகிறான். உதாரணத்திற்கு முன்பெல்லாம் என்னைச் சந்திக்க வந்த ஒரு ஏழைப்பிராமணனின் கதையைக் கூறலாம். கங்கைக் கரைக்கு அப்பால் வசித்துவந்த அந்தப்பிராமணன் இக்கரைக்கு வரும்பொழுது என்னைச் சந்திப்பது வழக்கம். மிகவும் கீழ்ப் படிவுள்ளவனாக அவன் இருந்தான். ஒருமுறை நான் அக்கரைக்குச் சென்ற பொழுது ஆற்றங்கரையில் அவனிருப்பதை அவதானித் தேன். அவன் என்னைக் கண்டதும், மரியாதை யற்ற தொனியில் என்னை அழைக்கக் கண்டேன். அவன் என்னை அழைத்த முறையில் அவனிடம் சிறிதளவாவது பணம் சேர்ந்திருக்க வேண்டுமென எனக்குப் புரிந்தது. அவ்வா றில்லா விடின் அவன் இவ்வாறு என்னை அழைத்திருக்கமாட்டான். செல்வத்தின் ஆற்றல் இத்தகையது. அது மனிதனைத் தற்பெருமை உள்ளவனாக்குகிறது.

பிரமம் ஒன்றே என்ற அத்வைத நிலைப் பாட்டை ஏற்றுக் கொண்ட இராமகிருஷ்ணர், அந்த நிலைப்பாட்டையே எல்லா ஆன்மாக்களும் ஒன்றே என்றும், அவையனைத்தும் ஒரே பிரமத்தின் கூறுகளே என்பதை நிறுவுவதற்குப் பயன்படுத்தினார். இதனடிப்படையிலேயே எல்லா மனிதரும் சமமானவர்கள் என அவர் போதித்தார். நடைமுறை உலகில் மனிதர்கள் என்று பார்க்கும் பொழுது அவர்கள் அனைவரும் ஒரேதன்மை உடையவர்களாக இல்லா திருப்பதற்குக் காரணம் மாயையேயாகும். ஆனால் ஆன்மாக்கள் என்ற நிலையில் மனிதரை நாம் நோக்குவோமாயின், மனிதர்கள் அனைவரும் சமமானவர்களேயாவர்.

'ஒரு கிராமத்தில் சன்னியாசிகள் மடமிருந்தது. அம்மடத்து சன்னியாசிகள் பிச்சை எடுத்தே தமக்குரிய உணவைப் பெற்றனர். ஒருமுறை பிச்சை எடுப்பதற்காக வெளியே சென்ற சன்னியாசி ஒருவர் அல்லூர் ஐமீன்தார் மிகக் கடுமையாக ஒரு ஏழையை அடிப்பதைக் கண்டார். மிகவும் இரக்ககுணமுள்ள அந்தச் சன்னியாசி ஐமீன்தாரிடம் சென்று அவனை அடிக்கவேண்டாமென்று இரந்து கேட்டார். ஆனால் அந்த ஐமீன்தாரோ உடனடியாக அந்தச் சன்னியாசியை நிலத்தில் மயங்கி விழும்வரை அடித்துப் போட்டார். செய்தியை வழிப்போக்கர் மூலம் அறிந்த அம்மடத்துச் சன்னியாசிகள் அவரை எடுத்துவந்து மிகுந்த எச்சரிக்கையுடன் அவர் உடல் நலம் பெறும்வரை பராமரித்தனர். உடல்நலம் பெற்று கண்விழித்த சன்னியா சியிடம் 'உமக்குப் பால் கொடுத்து பராமரித்தவர் எவரென கூறமுடியுமா' எனக் கேட்டனர். அதற்றுப் பதிலளித்த சன்னியாசி என்னை அடித்தவர் எவரோ அவரே எனக்கு பாலூட்டினார்' எனப் பதிலளித்தார்.'[9]

எல்லா ஆன்மாக்களினதும் ஒருமையை யும், உறவுமுறையையும் இக்கதை மூலம் இராமகிருஷ்ணர் விளக்குகிறார். இக்கோட்பாடு தர்க்கரீதியாக தீமையை பலாத்காரத்தின்வழி அகற்ற முயற்சித்தல் என்ற கோட்பாட்டை நிராகரிக்கிறது. பல்லுக்குப் பல், கண்ணுக்குக் கண் என்ற பழிக்குப் பழி என்ற தண்டனை முறைக்கெதிரான நிலைப்பாட்டுடையவராயும், இத்தகைய நியாயித்தல் முறை இராம கிருஷ்ணரை வகைமாதிரிக்குரிய அனுபூதி நெறிசார் இலட்சியவாதியாக எடுத்துக் காட்டு கிறது.

ஏனைய அனுபூதி நெறியாளர்களைப் போலவே இராமகிருஷ்ணரும் புலனுலகைத் துறந்தவராயும், ஆன்மீகத்தளத்தில் இறை வனுடன் ஒன்றியவராகவும் எவ்வாறு வாழுதல் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவராவர்.[10] இது இந்திய மரபில் யோகமார்க்க வாழ்க்கை முறையைக் குறிக்கும். சமாதி நிலைமூலம் தான் உண்மையான இறைவனுடன் தொடர்பு கொள்ளுதலும் சாத்தியமாகுமென அவரது நடைமுறைசார் போதனைகள் எடுத்துக் காட்டுகின்றன.

இராமகிருஷ்ணரின் போதனைகளை சமயம் சார்ந்த தூய ஆன்மீகப் போதனை களாகவே பெரும்பாலான ஆய்வாளர்கள் கருதுவதுண்டு. இத்தகைய கருத்து மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட கூற்றாகும். உண்மையில் இராமகிருஷ்ணரின் உலகப்பார்வை மிகவும் சிக்கலானது. அவரது உருவகங்கள் நடைமுறைசார் பயன் என்ற இலக்கைக் கொண்டவை. ஒருபுறம் இறைவன் பற்றிய போதனைகளாகவும், மறுபுறம் சமயத்தின் பெயரால் மிகையுணர்வுடன் சமயச் செயற்பாடுகளில் ஈடுபடுவதிலுள்ள ஆபத்தை உணர்த்துவதாகவும் அமைகிறது.

இவ்வுலகம் பிரமத்தின் அம்சமாயினும், தனிமனித ஆன்மாக்களின் இருப்பிடமுமாக உள்ளது. ஆன்மாக்களின் விடுதலை என்பது இவ்வுலகில் அதன் பண்பியலான நடத்தையில் தங்கியுள்ளது. மனிதன் பிரக்ஞை பூர்வமாகத் தன்னால் ஆற்றப்படவேண்டிய உலகியற் கடப்பாடுகளிலிருந்து தப்பிச் செல்லாது அவற்றை ஆற்றவேண்டிய கடப்பாடு உள்ளவன். தனது நாளாந்தக் கடமைகளை ஆற்றாது கடவுளைத் தொழுவதால் பயனேதும் விழையப் போவதில்லை.

இறையியல்வாதி என்ற நிலையிலிருந்து இராமகிருஷ்ணர் பேசும்பொழுது, அதிகாரத்

தைத் தேடி அலைபவன் மிகவும் கீழ்நிலை யிலுள்ள ஆன்மாவைக் கொண்டவனாவான் என்கின்றார்.

சமய சீர்திருத்த இயக்கத்தை ஆரம்பித்த இராமகிருஷ்ணரின் போதனைகளை பின் வருமாறு தொகுத்துக் கூறலாம்.

இறைவன் ஒருவனேயெனினும் அவன் பல்வகை அம்சங்களைக் கொண்டவன். சமயங்கள் ஒவ்வொன்றும் இறைவனின் அம்சங் களில் ஒன்றையே முதன்மைப்படுத்துவன வாகும். இவ்வாறு இறைவன் பற்றிய ஒரிறைவாத அணுகுமுறையால் சமயங்களிற்கிடையிலான முரண்பாட்டையும், வணக்கமுறைகளிற்கிடை யிலான முரண்பாடுகளையும் நீக்கி சமயங்களிற் கிடையிலான நல்லிணக்கக் கோட்பாட்டை போதிக்கிறார்.

தனியான்மாக்கள் நித்தியத் தன்மையை யும், தெய்வீகத் தன்மையையும் கொண்டவை எனக் கூறுவதன் மூலம் எல்லா மனிதர்களின தும் சமத்துவத்தை முதன்மைப்படுத்துகிறார். இதனடிப்படையில் இவ்வுலகு மெய்யானதென நிறுவுவதுடன், விடய இயல்புடைய இலட்சிய வாத அடிப்படையிலான வேதாந்தமெய்யியலை காலனியாதிக்கக் காலமாகிய புதிய வரலாற்றுச் சந்தர்ப்பத்திற்கேற்றதாக வளர்த்தெடுத்தார்.

மனித வாழ்க்கை சகலவிதத்திலும் இவ்வுலகத்தில் வளம்பெற்று, மூடநம்பிக்கைகள், சமயவேறுபாடுகள், மற்றும் அபூரணமானவை, தவறுகள் கழையப்பெற்று வளர்ச்சிபெற வேண்டுமென்ற நிலைப்பாடுடையவராய் இவர் காணப்பட்டார்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது இராமகிருஷ்ணரின் உலகநோக்கு காலனி யாதிக்க அடக்குமுறைக்கெதிரான குரலாகவும், இந்துமரபின் தாராண்மைவாத பிரிவினரின் காலனியாதிக்க எதிர்ப்பாகவும் விளங்கிய தெனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. Memoirs of Ramakrishna, Ramakrishna Vedanta Math, Calcutta 1957, p 23-24
2. ibid. pp. 24-25
3. ibid. p. 78
4. ibid. pp. 76-77
5. சமாதிநிலையில் தான் பெற்ற அனுபவத்தை இங்கு இராமகிருஷ்ணர் குறிப்பிடுகிறார்.
6. ibid. p. 86
7. ibid. p. 316
8. ibid. pp 89-90
9. ibid pp 208-209
10. ibid p 89
11. ibid. pp. 36-38
12. ibid pp 42-44
13. ibid pp 72-73
14. ibid p. 148